செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞூ மார்கழி மீ கக-உ வெள்ளிக்கிழமை (3-1-1975) [இல: முசு

# பல்கலைக் கழகப் புகுவகைத் தெரிவு

## பாதிப்பது யாரை?

### தமிழ் மாணக்கர்களுக்குத்தானு இத் தலை விதி!

இவ்வாண்டு பல்கலைக் கழகம் புகத் தகுதி பரீட்சை மூலமாகப் பெற்றவர்கள் பல்லாயிரக்கணக்கானேர். ஆனால் பூசாரி ஆமாச் சொல்லாதது போல, நூற்றுக்கு இருபது மாணக்கர்களே கல்வி ஆலயக் கர்ப்பக் கிருகத்துட் புக அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளிற் கற்று க. போ த உ. தரத்திற் சித்திபெற்ற பல்லாயிரவாகளுள் இந்தப் பிரத்தியேக முறையாற் பாதிக்கப்பட்டவர்கள் தொகைக்கு அதிகாரிகள் என்னவகை சொல்ல முடியும்.

இன்று வெளிவந்த செய்திப்படி இப் புதுமுறை நடைமுறையில் எடபடி இயங்கும் என்று சீர்பார்க்க ஒரு உப சபை நியமிக்கப்பெற்றிருக்கின்றதாம். குற்றுநோய் பற்றியுள்ளவருக்குற்ற சத்திர சிகிச்சை செயயாமல் இந்நோய் எவ்வகையில் நோயாளியை உபத்திரப்படுத்துகின்றதென்று விசாரணையிற் காலமபோக்கிக் காலனுக்கிடங் கொடுப்பது போலிருக்கின்றது இந்த சிகிச்சை. ——

## பரீட்சை

— 0 —

வண்ணை, சாந்தையர்மடம் சைவ சமய அபிவிருத்திக் சழகத்தினால் வருடந்தோறும நடாத்தப்பட்டு வரும் சைவ சமய அறிவுப் பரீடசை இவ்வருடமும நடைபெறும். பரிசில் பெறுவோருக்கு மகாசிவ ராத்திரியிலன்று பரிசில்கள் வழங்கப்பெறும்.

விண்ணப்பிக்குங் காலம்: 15-1-75க்கு முன்

பரீட்சை: 26-1-75 ஞாயிறு காலை 9 மணி

திரு வ. கந்தசாமி, பரீட்சைச் செயலாளர், 142, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். இம் முகவரியில் தொடர்புகொள்ளலாம். ——

## இன்று இயற்பகைநாயனுர் குருபூசை

'இல்லையே என்னுத இயற்பகைக்கும் அடியேன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொழுது புகழ்ந்த திருத்தொண்டர் 'இயற்பகைநாயனுர் குருபூசைத் தினம், இன்று; மார்கழிப் பூரம்.

இயற்பகை முனிவாவோல மீண்டுநீ வருவா யோல
மயர்ப்பிலா தானே யோல மன்பனே யோல மோலஞ்
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே யோல மென்ருன்
மயக்கறு மறையோ விட்ட மாலயன் றேட நின்ருன்.

— சேக்கிழார் சுவாமிகள்.

## தோத்திரம் - சாத்திரம் - அநுபூதி

### அன்பு - அறிவு - அருள்

[ "சைவ சித்தாந்த போதகர்" ]

"விண்ணை இடிக்கும் இமயம்" என்பது உணர்வு நிலை — அன்புநிலை "இமயம் இருபத்தெண்ணுயிரம் அடி" என்பது அறிவுநிலை — ஆராய்ச்சி நிலை. அன்பு நிலை காரண காரியத் தொடர்புக்கு அப்பாற்பட்டது.

அறிவு — ஆராய்ச்சி நிலை காரணகாரியத் தொடர்புடையது; தருக்க ரீதியானது. சாத்திரம், தோத்திரம் திருவருள்மயமானவை, திருவருளாலானவை.

தோத்திரம் அன்பு — பத்தி வழியில் முத்திநெறி.
சாத்திரம் அறிவு — ஆராய்ச்சி வழியில் முத்திநெறி.
தோத்திரம் — பன்னிரு திருமுறைகள்

( வளர்ச்சி 2-ஆம் பக்கம் )

## நூல்களில் நுழையும் நுண்பேதங்கள்

### அச்சேற்றும் ஆசிரியர்கள் ஆராயவேண்டும் அல்லவா?

#### பாடபேத விபரீதம்

பழந்தமிழ் நூல்களைப் புனரமைப்புச் செய்பவர்கள் பாடபேதங்களைச் செய்கின்ருர்களா?

அவ்வாறு செய்யப்பெறின் அவை அறியாது செய்யப் பெறுவனவா? அல்லது வேண்டுமென்று புகுத்தப்படுவனவா?

ஆக்கியோன் அமைத்த சொற்ருெடர்களுக்குள்ள கருத்தை மாற்ருமலே சொல் மாற்ருஞ் செய்யப்படுவதுமுண்டா? பொருளையே பேதம் பண்ணும் சொற்ருெடர் மாற்றத்தைத் துணிந்து செய்பவர்கள் எத்துணைப் பாண்டித்தியமுள்ளவர்கள் ஆக இருத்தல்வேண்டும் என்பதை அவர்கள் அறியாரா?

#### சபை வெளியீடு

பலவேறு பாடபேதங்களுண்டு. ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுவதுபோதும். அன்பும், சிவமும் இரண்டென்பர் அறிவிலார் என்று தொடங்கும் திருமந்திரத்தின் பாடம் பலவித பேதத்துக்குள்ளாகி விட்டது

பன்னிரு திருமுறைப் பதிப்பு. நீதி வெளியீடு (எண் 17) திருமந்திரம் — இதில்,

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

என்று பாடம் இருக்கின்றது.

சைவ பரிபாலன சபையார் வெளியிட்ட திருமந்திரம் — ஆங்கில மொழிபெயர்ப்பில்,

அன்பும் சிவமுமிரண் டென்பர் அறிவிலார்

என்றும் நான்காம் அடி 'அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே' என்றும் செய்யுள் விளங்குகின்றது.

#### அறிஞர்கள் கடன்

மிக முநதிய பதிப்பிலே பாடம் என்ன என்று அறிஞர்கள் இப் பாட பேதததைத் திருத்துதல் சாலச் சிறந்த தொண்டாகும். இப் பாடல் இவ் வருட க. பொ. த. ப் பரீட்சைக்குரிய சமய பாடப் பகுதித் திட்டத்தில் வரும் பாடல்களில் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது.

மாணக்கர்களுக்கு பாடபேதம் மனதைக் குழப்ப ஏதுவாயிருக்குமல்லவா! ——

## யாழ். நாயன்மார்கட்டு 'ஜொலிக்கும் தாரகை' இளைஞர் மன்றம்

———

இம் மன்றத்தினது படிப்பகத் திறப்பு விழா 10-1-75 வெள்ளிக்கிழமை மாலை 6-00 மணியளவில் திரு. க சொக்கலிங்கம் பீ ஏ. (சொக்கன்) அவர்களால் திறந்து வைக்கப்படும்.

இவ் விழாவில் பல அறிஞர்கள் உரையாற்றுவார்கள், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## தூரதிருஷ்டி விண்வெளித் தூது!

— 0 —

அனைத்துலகிலும் ஆகப்பெரிய தான தூர திருஷ்டி இயந்திரம் அமெரிககாவிலேயே அமைக்கப் பெற்றிருந்தது. அந்த இயந்திரத்தின் முகப்புக் கண்ணுடியின் விட்டம் இருநூறு அங்குலம் நீளமாகும். இது பலோமாறென்னும்குன்றில் அமைக்கப்பட்டது ஆனல், இப்பொழுது உருசியாவிலே காக்கேசிய மலைத் தொடரில் ஓர் குன்றிலே கடல் மட்டத்திலிருந்து 7000 அடி உயரத்தில 240 அங்குல விட்டமுள்ள கண்ணுடியுடன் தூர திருஷ்டி இயந்திரம நிறுவப்படுகின்றதாம.

வளர்ச்சி 6-ம் பக்கம்

## மாநகரசபைகள் பல மழுங்கின!

### விசேட ஆணையாளர் மேற்பார்வையில் விடப்பட்டன!

உள்ளூர் ஆட்சி மன்ற அமைப்பும் மாற்றம் அடைந்து வருவது அவதானத்துக்குரிய அளவில் வந்துவிட்டது.

உரிய காலத்திற் புதிய தேர்வு நடைபெறவேண்டிய காலி, நீர்கொழும்பு, தெகிவளை கல்கிசை என்னும் மாநகர சபைகள் தாமாகவே அற்றுப் போகின்றன. அவைகளுக்கு நீடிப்புப் பாக்கியத்தை அமைச்சர் அளிக்காது விசேட ஆணையாளரின் மேற்பார்வையில் இயங்க உத்தரவு பிறப்பித்திருக்கின்ருர்.

இதற்கிடையிலே உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தல்களைப் பேரவைப் பொதுத் தேர்தல் நிகழுங் காலத்திலேயே நிகழ்த்த ஒரு புதிய திட்டத்தை அமைச்சர் வகுத்து வருகின்றனராம்.

உள்ளூர் ஆட்சி மன்றங்களின் எல்லைகளைப் புனரமைபபுச் செய்வதற்கு ஒரு விசாரணை ஆணைக்குழு நிறுவப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பேரவை உறுப்பினருக்கும் உள்ளூர் மன்றத்துக்கும் நேரடித் தொடர்பு அமைதலை வரவிருக்கும் புதிய முறை வழி வகுக்குமெனக் கூறப்படுகின்றது

சர்வ மய மாற்றப் பாதையிலே மக்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனரா? ——

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# உலக க்ஷேமம்

புராணம் என்பது பழங் கதை. சில புராணங்கள் முன்னுள்ள வரலாறுகளைக் கூறும். சில புனைந்துரைக்கும் வரலாறுகளைக் கூறும். அவற்றின் நோக்கம் இறைவன் உலகுக்கு முதல்வன் என்பதனையும் உலக மக்களை வேதாகமங்களில் விதிக்கப்பட்டவைகளைச் செய்யவும் விலக்கப்பட்டவைகளை நீக்கி வாழத் தணை புரிதலாம். உலகில் சிவபெருமானை அர்ச்சித்தலும் சிவனடியார்களை அவமதித்தலும் நிகழுங் காலத்தில் நாட்டில் துன்பம் ஏற்படாதிருப்பதற்கும் திருவாதவூரடிகள்புராணத்தில் கடவுள் மாமுனிவர் மண் சுமந்த சருக்கத்தில் ஒரு உதாரணங் கூறுகின்றார்.

ஆதியாங் கடவு ளெந்தை யாலவா யமலன் மங்கை
பாதியான் சிறந்த பூசை பண்டையிற் குறைந்த துண்டோ
நீதியாந் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேற்
றீதியாஞ் செய்த துண்டோ செப்புமி னமைச்ச ரென்றான்.

பாண்டியன் திருவாதவூரடிகளைத் தாம் குதிரை வாங்கும்பொருட்டுக் கொடுத்த பொருளைத் திருப்பி உதவும் பொருட்டுத் தண்டனை செய்தபொழுது சிவபெருமான் வைகை நதியைப் பெருக்கெடுத்து நாட்டை அழிக்கத் திருவுளங் கொண்டார். வைகையாறு இரு மருங்கிலும் பெருக்கெடுத்து நாட்டில் அழிவையுண்டாக்கியது. பாண்டியன் வைகைக் கரைக்குச் சென்று பொன், முத்து, புஷ்பம் முதலியவற்றைச் சொரிந்து கங்காதேவியைத் தொழுது வைகையாற்றைச் சீற்றந் தணியும்படி வேண்டினான். ஆற்றின் பெருக்குக் குறையவில்லை. இன்னும் மிகுதியாகப் பெருக்கெடுத்தது, இதன் காரணத்தையறியும் பொருட்டு முற் குறித்த செய்யுளில் உள்ள கருத்தை மந்திரிமாரிடந் தெரிவிக்கின்றான்.

ஆதி முதல்வராகிய சொக்கநாதப் பெருமானுடைய பூசைகளில் குறைவுண்டாயிற்றோ! அல்லது தீமையில்லாது வாழுகின்ற தவ சிரேட்டர்களுக்கு யாம் துன்பஞ் செய்தோமோ? என்ற கேள்விகளை அமைச்சரிடம் வினவினான்.

அமைச்சர்கள் திருவாதவூரடிகளைச் சிறையில் வைத்திருப்பது வைகை நதியின் பெருக்கிற்குக் காரணம் என்று கூறினார்கள். அரசனும் அவர்களின் கூற்றை ஏற்றுக்கொண்டு திருவாதவூரடிகளைச் சிறையிலிருந்தும் நீக்கினான். வைகை நதியின் பெருக்குக் குறைந்தது.

உலகில் மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும்பொழுது கடவுள் பூசைகளுக்குக் குறைவு ஏதும் ஏற்பட்டதோ? அல்லது சிவனடியார்களுக்குத் துன்பமேற்பட்டதோ என்பவைகளை ஆராய்ந்து அவற்றை நீக்கி நாட்டைச் சிறப்பாக ஆண்டார்கள். இக்காலம் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு மேலே காட்டிய செய்யுள் நல்ல வழி காட்டுமல்லவா?

## தோத்திரம் சாத்திரம் அநுபூதி

(1ஆம் பக்கத்து வளர்ச்சி)

| | | |
|---|---|---|
| சாத்திரம் | — | பதினான்கு. முதனூல் சிவஞானபோதம். அது பன்னிரண்டு சூத்திரம். |
| சூத்திரம் 12 | — | தோத்திரம் 12 |
| 8ஆம் சூத்திரம் | — | 8 ஆம் திருமுறை = திருவாசகம, திருக்கோவையார். |
| 8ஆம் சாத்திரம் | — | திருவருட்பயன் |
| திருவாசகம திருக்கோவை } இலக்கியம் | | திருவருட்பயன்: இலக்கணம் |
| பன்னிரண்டாம் சூத்திரம் | — | { 12 ஆம் திருமுறை பெரிய புராணம் |

பத்தி — அன்பு நெறிச் சமயங்கள்: சைவம், வைணவம்.
தருக்க — அறிவு நெறிச் சமயங்கள்: பௌத்தம், சமணம்
தருக்க, அறிவுநெறிக்குப் பிரமாணம் — அளவை முக்கியம்

காண்டல், கருதல், உரை இம் மூன்றில் அளவைகள் அடங்கும். காண்டல் — பிரதியட்சப் பிரமாணம்; கருதல் — அநுமானம்; உரை - ஆகமம். முப்பொருள் உண்மையை தோத்திரம திருவருள்வழி உரை அளவையிற் சொல்வது. சாத்திரம் கருதல் - அநுமான அளவையிற் சொல்வது. கடவுள் உண்டு என்பது உரை அளவை. அதனை அநுமான அளவையாற் காட்டுவது சாத்திரம். நெருப்பை நேரே காண்டல் பிரதியட்சப் பிரமாணம். புகையைக்கொண்டு நெருப்புஉண்டு எனக் கருதுதல் அநுமானப் பிரமாணம். நெருப்பு உண்டு எனப் பிறர் சொல்வதை மாத்திரம் ஏற்றல் -ஆகமப் பிரமாணம் — உரை அளவை. தோத்திரம்: ஆகம உரை அளவை. இதனை மறுத்து எழுந்தன. பௌத்த சமண தர்க்க வாதங்கள்.

சம்பந்தப் பெருமான் பதிகத்தினால் வெப்பு நோயை நீக்கினார். "தருக்கம் பேசி இவரை வெல்லுதல் கூடாது; பிரதியட்சமாக 'அனலில் ஏட்டை இடுவோம்' என்றனர் சமணர். சம்பந்தர் வென்றார், மதுரை நீங்கினர். போதிமங்கையிற் பௌத்தர் தருக்கம் பேச விரும்பினர். ஞானசம்பந்தர் சார்பில் தமிழ் வேதலேககர் வாதித்தார். வாதத்தில் தோற்றோர் சைவராயினர்.

பத்தி, அன்பு நெறிக்கு அறிவு, ஆராய்ச்சி, தர்க்க வாதநெறியும் துணை. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதிக்கும் நெறி தர்க்கநெறி. "மிக்குச் சோதிக்க வேண்டாம்; சுடர் விட்டுளன் எங்கள் சோதி" என்பது சம்பந்தர் திருவாக்கு.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் வைணவ தோத்திரம். தருக்க அறிவு ஆராய்ச்சியில் வைணவ தோத்திரக் கருத்தை நிலைநாட்டியவர் இராமாநுசர். பன்னிரு திருமுறைத் தோத்திரக் கருத்தினை நிலைநாட்டியவர் மெய்கண்டார்.

ஏகாத்மவாதம், மாயாவாதம், கேவலாத்வைதம் முதலியவற்றிலிருந்து திருமுறை தந்த அன்பு நெறியைப் பாதுகாக்க மெய்கண்ட சாத்திரங்கள் எழுந்தன.

உரை அளவையிலான தோத்திரங்கட்குப் பின்னர் அநுமான வழி அளவையிலான மெய்கண்ட சாத்திரங்கள் எழுந்தன. வெறும் உரை அளவையினாலோ, அநுமான அளவையினாலோ சிவஞானம் சித்தியாது. திருவருளினாலேயே சிவஞானம், சிவாநுபூதி சித்திக்கும் சிவஞானப் பேற்றினைத் திருவருளே அளிக்கவல்லது.

"மறையினால், அயனால், மாலால், மனத்தினால், வாக்கால் மற்றும் குறைவு இலா அளவினாலும் கூறொணாது நின்ற இறைவனார் கமலபாதம்" எனக் கூறிய சித்தியார்,

அருளினால் ஆகமத்தே அறியலாம்; அளவினாலுந் தெருளலாம்; சிவனை ஞானச் செய்தியால் சிந்தையுள்ளே மருள் எலாம் நீங்கக் கண்டு வாழலாம்; பிறவிமாயா இருள் எலாம் இரிக்கலாகும் ... ... ....
எனத் திருவருளைப் பயன் செய்கின்றது.

அன்புநெறி வழிவந்த தோத்திரமும், அறிவு நெறி வழிவந்த சாத்திரமும் பயன்தரத் திருவருளே துணையாதல் வேண்டும்,

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலயபாண்டியனார் அவர்கள் —

(முன் வளர்ச்சி — 21)

அகலவென்னுஞ் செயவெனெச்சம் உண்ணவந்தானென்றாற் போல முதலும் படுபொருளுமாதற் பொருண்மைக்கண் வந்தது. விளக்குப்புக விருண்மாய்ந்தாங்கு மெய்ச்சுடர்வரப் பொய்யாயின வெல்லாம் போயகன்றனவென்க;

இதனாற் பொய்யாயினவெல்லாந் தொக்கதொகை இருளாதல் பெறப்படும். மெய்ச்சுடரான் விளக்கப்படும் பொருளாவன தானும் தனிநிலையுயிர்களுமாம்;

ஞாயிறு, திங்கள், விளக்கு முதலாய ஒளியெல்லாம் பொய்ப்பொருள்விளக்கும் பொய்ச் சுடராதலின் இறையொளியை மெய்ப்பொருள்விளக்கு மெய்ச்சுடரென்றார்.

மெய்ஞ்ஞானம்: கேடின்றி எஞ்ஞான்று மொருபெற்றியேயாய் நிலைபெறுந் தெளிவுணர்வு. மெய்ச்சுடர்; பெயரொட்டு. பண்புத் தொகையுமாம்;

இனி மிளிர்கின்ற சுடர் என்பதும் கீழ்மேலாயெரிகின்ற விளக்கெனவும் பொருள்படும். உலகத்து விளக்கெல்லாங் கீழிருந்து மேனோக்கியெரிவது போலாது மேலிருந்து கீழ்நோக்கி யெரிகின்ற விளக்கென்றவாறு. மிளிர்தல், கீழ்மேலாதல்.

### எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே!

உரை:- நின்னுணர்வேயன்றி வேறெவ்வுணர்வு மில்லாதேனுக்குப் பேரின்பமாயிருக்கும் பெருமையுடையானே! எஞ்ஞானமும் என்னுமுற்றும்மை தொகுத்தல்;

நின்னுணர்வு: நின்னையுணருமுணர்வு. சொல்லெச்சம் விரிக்கப்பட்டது. வேறெவ்வுணர்வுடையார்க்கும் பெருமானின்பப் பிழம்பாதல் பெறப்படாது. உயிர் தன்னைத் தானுணருமுணர்வுமிழத்தல் வேண்டும்.

இனி, எவ்வுணர்வு மில்லாத மடவேனுக்கு இன்பமாயிருக்கும் பெருமானென்றல் பொருந்தாமை காண்க.

### அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே!

உரை: அவ்வாறு நின்னையுணரு மென்னுணர்வை என்னிறைவு முழுதினும் பரப்பிக் காட்டுகின்ற நல்லுணர்வே!

அஞ்ஞானம், அவ்வுணர்வு

ஒருவழிப் பொருளையுணருங்கால் உயிர் ஒருவழிப் பொருளெனத் தோன்றுதலும் நிறைபொருளை யுணருங்கால் உயிர் நிறை பொருளெனத் தோன்றுதலும் உயிர்க்குச் சார்ந்ததன் வண்ணமாதலாம்.

நிறை பொருளாகிய இறையைச் சார்ந்த வுயிர்க்குத் தன்னறிவு மாசுநீங்குதலற்ற தன்னிறைவு முழுதினும் விளங்கித் தோன்றும். மாசு நீங்கிய ஆடைக்குத் தன் வெறுப்புத் தன்னிடமுழுதினும் விளங்கித் தோன்றுமாறுபோல.

இனி, அஞ்ஞானந் தன்னையகல்விக்கு நல்லறிவென்பதற்கு அறியாமையைப் போக்கும் அருளுணர்வெனினுமமையும்.

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

## திருவருளே துணை என நம்புவோம்!



பத்தர்: "1975 ஆம் வருஷ பொங்கல்விழாவை நினைக்க— உள்ளத்தில் உவகை பொங்காதாமே அம்மான்? பச்சையரிசி பயறு, சர்க்கரையின் விலைகள் தலைக்குமேல் உயர்ந்து நிற்கும் பெருமை இந்த எழுபத்தைந்தாமாண்டுக்குத்தானுரியதா?

சித்தர்: "உண்மைதான்; இந்த ஆண்டு எங்களுட் பலரது சிந்தனையை நல்வழியிற்றூண்டியிருக்குது பாருங்கோ! பதநீரில் இருந்து சீனி செய்து ஓரளவாவதுபற்றாக்குறையைப்போக்க முடியுமென்றும், உணவுற்பத்தியைப் பெருக்குவோம் என்றும் ஒரே குரலில் அன்பர்கள் பேசிக்கொள்வதை இந்த எழுபத்தைந்திற் கேட்கிறோமே! இக் குரல்களை மதிக்கிறோமே! எங்கள் 'ஊற்று' என்கிற செய்தி நிறுவனத்தைச்சேர்ந்த அன்பர்கள் பனம் பொருட்களின் பயன்களைப் பெருக்கப் பெரிய திட்டமேவகுக்கின்றார்களாம்! ஆதலால், நற் சிந்தனையைத் தந்த இந்தஆண்டு வழிகாட்ட திருவருளை வேண்டுவோமாக!

— 'நாயன்மார் - நாதன்'

## வாழ்க்கை பல ...

5-ஆம் பக்கத்து வளர்ச்சி

ழி, இக்காலத்தில் ஆவினம் கூடப் படுகொலைக்குள்ளாவதைச் சட்டத்தரணிகள்தான் ஆதாரத்தென நடைமுறையிற் காட்டுதல் பெருந்தகையையன்றோ.

x x x

## பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்

பால் விநியோகச்சபை என்றொரு தாபனம் உண்டு மாநகர்களில் முக்கியமாகக் கொழும்பு மாநகரிலே தாய்மார்கள் தங்கள் பச்சிளங் குழந்தைகளுக்குத் தமது பால் பற்றாமையாற் பால் விநியோகச் சபையாரின் கருணை நீர் கலந்த பாலையே பயன்படுத்தி வருவது வழக்கம்.

இந்தப் பாற்சபை அலுவலாளர்கள் இருந்தாற்போல வேலை நிறுத்தஞ் செய்தனர். காரணம் ஆண்டு வெகுமதிப் பற்றாமையாம். பால்விநியோகம் நிறுத்தப் பெற்றாற் பாதிக்கப்படுவோர் யார், ஒருபிழையுமறியாத தங்கள் குழந்தைகள் என்பதையும் மறந்து, தம்மையும் மறந்து, நியாயம் நீதியையும் துறந்து பால் வழங்காது தடுத்தவர்களுக்குப் பொறுப் புணர்ச்சியுணர்ந்த ஒரு சபை அத்தியாவசியம் வேண்டும்.

ஆவின் பால் கிடைப்பதரிது. அவ்வாறிருக்க மேனாட்டு பால்களான தூள் வகையை உபயோகித்துப் பால் வழங்கப்படுகின்றது. அதையும் குழந்தைகளுக்குக் கொடுக்க மறுத்தாற் 'பூசாரி விடை கொடுத்தாலும்' என்ற பழமொழிபோல உரியதை மறுக்கும் குற்றமாய் முடியுமே.

Registered as a Newspaper in Ceylon [illegible]

Supplement to the "INTHUSATHANAM"

Price 20 Cts.

Our Work is
Our Advertisement

Saiva Prakasa Press

# INTHUSATHANAM
# (The Hindu Organ)

*( The only Newspaper in Ceylon for the Hindus )*

PUBLISHED EVERY FRIDAY

FOR BOOKS ON
SAIVAISM

Dial 356

Saiva Prakasa
Book Depot

Estd. Sept. 11, 1889 JAFFNA, FRIDAY JANUARY 3, 1975 Phone No. 256

## 1975-Food or Famine?

**( By E. P. Rasiah. )**

Nothing was older than the struggle for food. From the time the primitive hunters stalked the animals of the jungle and the cultivators dug the ground to induce grain to grow, man has been battling with hunger. History was replete with his failures. The Bible has chronicled one famine after another. Food was in such short supply in ancient Athens, that visiting merchant vessels were compelled to share their food-supplies with the city folks. Romans had prayed at the feet of Olympus for food. Every generation in medieval Europe had suffered from famine. The extremely poor is said to have eaten cats, dogs and the droppings of birds. Some starving mothers had eaten their dying children consequent to unbearable hunger. Famine had driven certain people of backward countries to resort even to cannibalism.

According to Lester Brown, a leading food-expert from U. S. A. "The world's reserves of grain just now have reached 22 years' low level—equal to 26 days' supplies, as against 95 days' suppli s in normal times. Even the U. S. A was no longer the bottomless cornicopia that it once was." Against this gloomy backdrop nearly a 1000 delegates from about a 100 nations and a dozen International organisations had gathered in Rome recently for the World Food Conference sponsored by the U. N. O. It was the first instance of a concerted global effort in history to tackle the problem of hunger. For 12 days, the delegates had discussed measures "To secure food for the starving and also about a drive to mobilise technological and financial aids from the wealthy, Industrial and oil exporting States to help along 100 poorer nations increase their food output". A Committee of 36 member nations including Ceylon has been appointed to implement the decisions.

Parson Thomas Malthus, an English Economist, nearly a century ago had predicted "that the population would out-run man's capacity to produce food." Of nearly half a billion people suffering from some form of hunger, 10,000 die of starvation each week in Africa, Asia and Latin America There were severe shortages of food in Brazil and Bangla Desh. India alone will need 8 to 10 million tons of food in the ensuing year from outside sources; or else 30 million people will have to starve Experts say that India's 2·2 % annual population growth rate will double the country's current population of 596 millions by the year 2000 A. D. Likewise there is the prospect of population explosion in other countries. The apparent inability or unwillingness of many under-developed countries to adopt family planning has embittered many agricultural economists.

Shepherd, a News-paper Correspondent has reported that 'In the worst affected areas of Bangla Desh, gruel-kitchens have been installed. They provide a watery mess of broken wheat with fragments of pumpkin and some leafy vegetables. In one village even Hindus (traditionally vegetarians) were consuming dead cattle and buffaloes driven by starvation."

Norman Barlorg, winner of the 1970 Nobel Peace Prize for his development of wheat strains, has said "...you cannot have political stability based on empty stomachs and poverty". We know that shortages and high prices of food have contributed to the toppling of governments in certain countries — Haile Salassie, Emperor of Ethiopia being the latest victim. Dr. John Knowles, President of the Rockfeller Foundation has warned "We will see increasing famine, pestilence and the extermination of a large number of people, if early action is not taken by world-leaders."

Severe drought threatened the wells and tanks —the life-line of the cultivators of North-Ceylon—to go dry; but the

( Over to page 4)

## The Truth will be Out

### Standardisation of Marks Severe Blow to Tamil Students

That at the sessions of the S. L. F. P held at Matara, a delegate from the North had brought to the notice of the ruling party in the immediate presence of the Premier, the handicap, standardisation of marks, had inflicted on Tamil students in the matter of their legitimate claim for admission to the University is certainly a heartening note. Not that with this demand of the delegate in question the problem stands a chance of being solved but that the S L F P the founding Partner of the U L F Government has been told by a leading member of the S. L. F. P that there is standardisation of marks and that this peculiar procedure has wrought havoc on Tamil students.

It must also be remembered that resolutions or statements placed before the Annual Sessions of any Political Party, even it be the Ruling Front, do not have the capacity to invoke administrative action. At the most the question may be referred to the Minister concerned. What the Minister will do is a matter for mere musing. All that would remain is the fact that a Member of the Ruling Party had himself brought the matter to the notice of the Government

It is now understood that a committee is being set up to report on the much criticized selection according to standardisation.

University Admissions

## Quota System Places Candidates in a Quandary

The District Quota System, like any other Quota Manipulation, in the context of admissions to the University for higher education, has created more-misgivings than ever before.

Eligibility being passes in four subjects or three subjects with marks 25 in the fourth subject in the G. C. E. ( A ) Level Examination of 1974 as many as 15,446 candidates have been pronounced as eligible for selection for admission to the University.

The selections now made available to the Press reveal that only twenty per centum of 15 446 of the eligible candidates have caught the eye of the selectors, the remaining eighty per centum being caught out.

The particulars re Colombo, Jaffna, Galle, Kandy, Batticaloa, Kurunegala, Anuradhapura, Ratnapura and Badulla are as follows:

| | Medicine and Bio. | Physical Science | Arts |
|---|---|---|---|
| Colombo | 751 | 803 | 2241 |
| Jaffna | 399 | 595 | 609 |
| Galle | 114 | 161 | 698 |
| Kandy | 145 | 124 | 998 |
| Batticaloa | 19 | 32 | 90 |
| Kurunegala | 64 | 76 | 1349 |
| Anuradhapura | 9 | 8 | 298 |
| Ratnapura | 16 | 19 | 474 |
| Badulla | 14 | 19 | 219 |

## Come, Offer Worship, O My Mind !

Come offer worship, O my mind,
To the Almighty's Holy Feet,
Who has his temple in the hearts
Of those that pray to Him.

Come, come to honour, O my mind,
By speaking without speech,
The Holy Feet which stand as all,
And are beyond all too.

Come gladly and freely, O my mind,
For me on earth to know
and venerate the Holy Word —
"Where you are, there am I".

Come unreservedly, O my mind,
That I may revere and love
That Truth, which is but One alone,
Yet stands as 'two' and 'three'.

Without attachment. O my mind,
Come to adore the Grace
Of the Guru Supreme, to whom are attached'
Those of attachment free.

—Natchintanai

THOUGHTS TO BE TREASURED

வேதமோ(டு) ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்,
ஓதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன்
நாத னுடையவை, நாடில் இரண் டந்தம்
பேதம தென்பர், பெரியோர்க்(கு) அபேதமே.

Both the Vedas and the Agamas are true Revelation, couched in general and specific terms, respectively. Both are the word of the Lord. (Superficial researchmen) say that the conclusions of the two differ, but the wise see no such difference.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, JANUARY 3, 1975

# Off to One Thousand Nine Hundred and Seventy Five

The methodical march to the Twenty First Century has moved closer with the commencement of the last quarter of the present era of one hundred years. The weather is welcomingly bright here, despite the forecasts that depressions threaten disastrous climatic changes. The exasperating consequences of the extensive earthquake in Northern Pakistan and the devastation in the area of Darwin however continue to haunt the minds of the people. Yet hope springs, true to human instinct.

What the next twelve months have in store for the world can only be presumed from the experience of the present and the immediate past. Summarising the situation we may safely say that everything—nation, politics, society, to pick a few is at the cross-roads. Man being a pilgrim pedestrian is certainly confronted with the conflict of conjecture being caught not between two minds but among several minds.

With the background of a bitter 1974, we have to plan for the year that has just dawned. It needs little difficulty to map out the program on the footing that the problem of food is almost precarious with the prospects of a thin harvest of paddy diminishing daily. Here is a challenge to the cultivator, the consumer, the citizen and in general to the country as a whole.

The entire resources of the results of research in agriculture, the concerted effort of the contributing factors of the experts of irrigational development, the sincere and strenuous striving of the peasant and above all the maximum output of co-operation in the Administrative sectors must be utilised in a supreme endeavour to create from the ruins of 1974 something substantial that can pave the way for a pull out.

One thing is crystal clear. There cannot be any complacency anywhere. Awareness of the awful plight in which the people are placed must surely induce, nay inspire every single individual to more work, better work and full work. Let that be the 1975 ideal.

36 Years Ago

# Democracy and the Press

By the Hon. C. W. W. Kannangara

( Continued from last issue )

It is education alone that could impart in a people the sense of correctness and responsibility which is necessary if they are to choose the proper persons to represent them in the Councils of Government. This mass education is a stupendous trsk. Literacy should not be mistaken for education. It is only a man who understands the essentials of Government that is capable of exercising a sound judgment in the matter of choosing his representative. A "literate" man is one who can read and write and understand a few simple things. But it is not all "literate" men that can come to correct judgment on matters of moment. And above all there is character which only a liberal and well-planned education can give and without which one's judgment is very often blurred. Now have we attained this ideal of mass education either in the West or the East ? Or is what we call modern democracy all make - believe?

## Democracy and Dictatorship

The 'totalitarian' States say "The head of the State is the representative of the will of the whole nation." And they demonstrate this statement by overwhelming majority verdict of the people obtained at a plebiscite or referendum The plebiscite is a closer approximation to true democracy as the masses are called upon to register a verdict directly on some stated issue. In the circumstances could the modern dictatorship Government be called democratic ? No. The essence of democracy is freedom of choice. No undue influence should be brought to bear on anybody. But in totalitarian States the rabble often say "aye" on the point of the bayonet or when something spectacular is held out before them to distract their attention from a realisation of their fundamental rights. Hence the basis of Government becomes one of force and fear. Fear and make believe sometimes become the basis of Government even in the so-called democratic countries. For the simple reason that there is a vast inequality in the powers of understanding of ordinary men and women. You tell an average man that a certain line of policy is the best for the country, is the only one that would insure the security of his wages, property and his life, and the glory of the nation, he believes you and thinks you must be a wonderful man to have mastered all the details of Government; or what else could he do when he understands as little about the intricacies of this highly specialised organisations called Government as he does about Einstein's theory of relativity. So democracy will never be what it was meant to be and what philosophers dream it ought to be unless and until there is absolute equality of understanding amongst all the people of a nation. To achieve the 'sine qua non' of an almost Utopian democracy should be one of the purposes of education And education does not mean education imparted in sch ols and Universi ties alone, for in schools the education is very elementary and only a small percentage of a nation's children can acquire a University education. So the education I have in view which I might call education for citizenship is the task of every patriotic citizen, organisation or body including the Press. No one will deny that the Press fills a most important place in the affairs of a nation, but it can be a power for good as well as evil. The press in Ceylon has always striven to maintain the best traditions of journalism and always displayed a sense of responsibility and moderation in the task of educating public opinion. It should be remembered that the duty of actively influencing public opinion is just as equally important as that of accurately reflecting it. All the world over the power of the Press has been used on occasions for sinister purposes with disastrous results. I do not say that one organ should represent all points of view. There is nothing wrong in the advocacy of one point of view or in pursuing a certain line of policy provided the organ in question is consistent with its principles and seeks to give sincere expression to them.

# Fully Vegetarian Farewell Party

"A farewell party lunch was given to the Magistrate Jaffna on his transfer as District Judge to Kalmunai by the Staff of Magistrate Court, Jaffna on December 26, 1974. As requested by the Magistrate, it was strictly a vegetarian Lunch Party. I was one of those who participated at this function. There were Tamil, Sinhalese and Muslim officers who participated at this lunch party. They appreciated this vegetarian lunch very much. I am proud to say that this is the first Farewell party where strictly vegetarian food was supplied. All credit goes to Mr Palakiddinar" says Mr. T. Canagarajah who attended the party.

## 1975—Food or...

( From page 3 )

recent rains have averted that calamity, It is however feared that the paddy harvest would fail and 1975 may turn out to be an year of Famine. Will Jaffna too be forced to face the fate of Bangla Desh and experience its distress and hardship? Timely action is needed on the part of all to stave off the spectre of famine.

## A Tribute to The "Hindu Organ"

The Hindu Organ, perhaps primarily intended to further the interests of the Hindu community, has, I believe, had many many years of useful service. While conserving the interests of the Hindu Religion and pledged to fight the inroads of whatever is undesirable in alien culture and thought, it has, I believe, taken a not insignificant part in the political education of the people.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday January 3, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

# " ஊடுவதுன்ஞேடுவப்பது முன்னே "

( திரு. செ. சின்னத்துரை ஏழாலை, சுன்னுகம் )

(முன் வளர்ச்சி – 3)

அவர்கள் மற்றவர்களை வைதார்களல்லர் குற்றம் நீ குணங்கள் நீ என்பதனை தெளிவுற உணர்ந்தார்கள் இறைவனே நன்மையும் திமையும் தமக்குத் தருகிருர் என்பதனை உணர்ந்தார்கள் இறைவனைப் பிரார்த்தித்து துன்ப நிவிர்த்தியும் வெற்றிகளும் பெற்ருர்கள் 1008 அண்டங்களையும் 108 யுகங்கள் அவுணர்களின் அரசனுகிய சூரபதுமன் ஆண்டான் அவன் தேவர்களை நெடுங்காலமாகச் சிறையிலிட்டான் அளவில்லாத கொடுமைகளைச் செய்தான் நான் என்னும் அகங்காரத் திமிரினுல் உயிர்கள் அல்லலுற்றன தேவர்கள் உறுதியாக கயிலாயநாதனுக்கு முறையிட்டபடியால் சூரனைச் சங்காரம் செய்து தேவர்களை மீட்க அருட்சக்தியைக்குறிக்கும் வேலாயுதத்துடனும் கருணை கூர்முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டுள்ள சுப்பிரமணியப் பெருமானை கயிலாயநாதன் அனுப்பி அருள் புரிந்தார் திருப்பாற்கடலில் எழுந்த ஆலகால விஷத்தை தேவர்களின் வழிபாட்டிற்கு இணங்கி அவர்களைக் காக்க சிவபெருமான் தாமே அந்த விஷத்தை கண்டத்தில் தரித்தார் இமயம் தொடங்கி கன்னிய குமரி வரைக்கும் புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தில் வேதகாலம் தொடக்கம் எண்ணற்ற அடியாருக்காக தனக்குவமையில்லாத சிற்பரசவஸ்துவாகிய சிவபிரான் தம்மைச் சரணடைந்த அடியார்களை இரட்சித்த கதைகள் பற்பல உண்டு. அவ்வடியார்கள் எம்பெருமானுடன் உறவுகோல் நட்டு உணர்பு கயிற்றினுல் உள்ளத்தைக் கடைந்தார்கள். எம்பெருமான் வெளிப்பட்டுக் காட்சியளித்தார். நாம் வாழ்வதற்கு இந்த விசித்திரமான அழகிய உலகத்தையும், காயமாகிய கோயிலையும் தந்து இந்தப் புவனத்திலிருந்து வாழ்வதற்கு உள்ளங் கவர்கள்வனுய்த் தோன்ருத்துணையாய் இருப்பவரும் சிவபிரானே என்பதை உணர்ந்தார்கள். அவரின் அருட் குணங்களை உணர்ந்து உள்ளம் உருகி அவருடனே பேசுவதும் (Communoon) மனம் நினைப்பதுமாய் விளங்கினர், " சிரிப்பார், களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை விரிப்பார், கேட்பார், மெச்சுவார் வெவ்வேறிருந்துன் திருநாமம் தரிப்பார் " என்று மணிவாசகர் கூறுகிருர்.

ஊசல்படுமனமின்றி ஏகதேச அறிவை விட்டு இறைவனின் வியாபகத்தினுள்ள வியாப்பிய பொருளாக அடங்கி ஞானிகள் வாழ்வார்கள்.

"மாசதனில் தூய்மையினின்
வறுமைவாழ்வில் வருத்தத்தில்
திருத்தத்தில் மைதுனத்திற்
சினத்தில் ஆசையினின்
வெறுப்பின் இவையல்லாதும்
எல்லாம அடைந்தாலும்,
ஞானிகள் தாம் அரனடியை
அகலார்'

என்பது சிவஞானசித்தியாரில் அருணந்தி சிவாச்சாரியார் கூறும் பொன்மொழி. குற்றம், தூய்மை, வாய்மை, வறுமை, வாழ்வு, வருத்தம், இன்பம், புணர்ச்சி, கோபம், ஆசை, வெறுப்பு ஆகிய எல்லாவற்றிலும் இறைவன் தம்மைச் செலுத்துகிருன் என்ற உண்மைத் திருவடி ஞானம் அடியார்களிடத்திலுண்டு.

"செய்யுமவனும் பலனுஞ்
செய்வித்து நிற்போனு
மெய்தவரும் பொருளும்
யாவையும் நீயே'

என்பது கந்தபுராணத்தில் தேவர்கள் போற்று படலத்தில் கச்சியப்ப சிவாச்சாரியாரின் கூற்று.

"அலகில் கலையின்
பொருட்கெல்லை
ஆடுங் கழலே''

என்று சண்டேசுரநாயனுர் புராணத்திலும்,

"உள்ள நிறைகலைத்
துறைகள் ஒழிவின்றிப்
பயின்றவற்ருல்
தெள்ளிவடி வடிவடித்
தறிந்தபொருள்
சிவன்கழலிற்
செறிவென்றே''

என்று சிறுத்தொண்டர் புராணத்திலும் திருவடிச் செறிவின் சிறப்பைப் பற்றி சேக்கிழார் சுவாமிகள் திட்டவட்டமாகக் கூறுகிருர்.

திருவள்ளுவநாயனுர் கடவுள் வாழ்த்து என்னும் முதல் அதிகாரத்தில் பல செய்யுட்களில் திருவடியைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

"பிறவிக் கடல் நீந்துவா
நீந்தார் இறைவனடி
சேராதார்"

ஆகையால், இறைவனடிக்கு சரண்புகுந்து எமக்குரிய குறைகளை அவருக்கே உரைத்து அவரின் அருள் வெள்ளத்தில் எம்மனம் திளைக்க வேண்டும்.

பஞ்சம், பிணி, வேலையில்லாத் திண்டாட்டம், மன நிம்மதியின்மை முதலியவற்றின் தாக்கத்தால் நாம் அல்லலுறுகின்ருேம். அன்பு, நன்றி, தர்மம், பெற்ருேரைப் பேணல், நேர்மை, நடுவு நிலைமை குன்றினபடியால் வரட்சிமிகுந்துள்ளது. மழைவளம் தேய்ந்துவிட்டது. சகல பிழைகளும் எம்முடையன.

ஆகையால், அருள்வள்ளலாகிய இறைவனை மனம், வாக்கு, காயம் மூன்றினுலும் அன்போடும், பயபக்தியோடும், பணிவோடும் எம்குறைபாடுகளை நிவிர்த்தி செய்யுமாறு வழிபட்டு பிரார்த்தனை செய்து சகல வளங்களையும் பெறுவோமாக.

"அப்பனை நந்தியை
யாரா வமுதினை
ஒப்பிலி வள்ளலையூழி
முதல்வனை
எப்பரி சாயினு
மேத்துமிலேத்தினுல்
அப்பரி சீனருள் பெறலாமே"

— திருமந்திரம்

'ஆட்பாலவர்க் கருளும்
வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை
கிளக்கவேண்டா
கோட்பாலனவும் வினையும்
குறுகாமை யெந்தை
தாட் பால்வணங்கித்
தலைநின்றிவைகேட்க
தக்கார்

— திருஞானசம்பந்தர்

# வாழ்க்கை பலவகை

## பிரிவுபசார விருந்திற் புனித போசனம்

யாழ் நீதவான் மன்ற நீதிபதி திரு. பாலகிட்டிணர் மாற்றம் பெற்று வேறிடம் சென்றபொழுது சட்டத்தரணிகள் அவருக்கு உபசார விருந்தளித்தனர். வழமை போல இவ்விருந்துகள் எல்லாம் புற நாட்டுப் நாகரிகப் பான்மையிலிருக்கும், ஆனுல் உபசரிக்கப்படுபவரின் உள்ளக் கருத்துக்கமையப் புனித போசனமே அன்று வழங்கப்பட்டதென்பது ஒரு புதுமையே.

நீதிமன்ற அதிபதி இந்த நீர்மைக்கு நிமித்தகாரணராயிருந்தார் என்பதுதான் வியக்கத்தக்க விஷயமாகும். திரு பாலகிட்டிணர் அவ்விருந்துபசாரத்தின் போது தாம் தேசிய உடையையே உத்தியோக உடையாக உபயோகிக்க ஒழுங்கு செய்திருப்பதாகக் கூறி இன்னமொரு புதுமையைப் புகுத்தினதும் போற்றற்குரியதே.

கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா உயிருங் கைகூப்பித் தொழும் என்ற குறளின் பொருளைச் சட்டத்தரணிகள் அறிந்திருப்பது சாலப்பொருந்தும். நீதவான் மன்றத்தினர் கொலை புரிந்தவர்களுக்குக்கடூழிய தண்டனை புரிவது நெறி யென்பதை யாவரும் அறிவர். ஆடு, கோ

(வளர்ச்சி 2 -ஆம் பக்கம்)

## அங்கும் இங்கும்

(6ஆம் பக்கத்து வளர்ச்சி)

லைக்காரரை ஏற்றிச் சென்ற சாரதி சரணடைந்ததின் காரணமாகக் கொள்ளைக்காரரும் பிடிபடலாம் என்று தெரியவருகிறது.

❁ வேலை நிறுத்தங் காரணமாகவும், இரசாயனப்பொருள் தட்டுப்பாடு காரணமாகவும் நாட்டில் சிக்கரெட் தட்டுப்பாடு நிலவுகின்றது. சிக்கரெட் தட்டுப்பாடு காரணமாக சில இடங்களில் கைகலப்பும் நடைபெற்றுள்ளது. ——


# புத்தக விலை விபரம்

| | ரூ | ச. |
|---|---|---|
| திருச்செந்தூர்ப்புராணம் ... ... | 15 | 00 |
| தஞ்சைவாணன் கோவை ... ... | 10 | 00 |
| சிதம்பரமான்மியம் ... ... | 1 | 00 |
| நளவெண்பா கலிநீங்கு காண்ட உரை ... | | 75 |
| ஆரோக்கிய தேகப் பயிற்சி ... ... | 1 | 00 |
| இலக்கிய வாசகம் 3-ம் புத்தகம் ... | | 65 |
| விஞவெண்பா ... ... ... | | 50 |
| உண்மை நெறி விளக்கம் ... ... | | 50 |
| ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர் ... ... | | 50 |
| சமய குரவர் சந்தான குரவர் ... | 1 | 25 |
| கதிர்காம மான்மியம் ... ... | | 50 |
| புலியூர் அந்தாதி ... ... | 2 | 00 |
| மறைசை யந்தாதி ... ... | | 50 |
| கோபால — நேசரத்தினம் ... ... | 1 | 25 |
| மார்க்கண்டன் நாடகம் வாளபிமன் நாடகம் | 4 | 00 |
| நாவலர் சற்குருமணி மாலை ... ... | 1 | 00 |
| சைவபோதம் முதலாம் புத்தகம் ... | | 75 |
| சைவபோதம் இரண்டாம் புத்தகம் ... | 1 | 00 |
| நல்வழி ... ... ... | | 15 |
| கிருட்டிணன் தூது உரை ... ... | 1 | 75 |
| வென்னியர் ... ... ... | 2 | 00 |
| சிவபூசைத் திரட்டு ... ... | | 50 |
| மஹாளய பட்சம் ... ... | | 25 |
| சரித்திர சங்கிரகம் ... ... | 1 | 00 |
| சைவசமய அறிமுகம் ... ... | 1 | 00 |
| செந்தமிழ் வாசக மஞ்சரி ... ... | 1 | 25 |
| வெற்றிவேற்கை ... ... ... | | 10 |
| நமச்சிவாய மாலை ... ... ... | | 15 |
| நன்நெறி ... ... ... | | 15 |
| சைவசமய நெறி இரண்டாம் வகுப்பு ... | | 75 |
| சைவசமய நெறி ஒன்பதாம் வகுப்பு ... | 2 | 00 |
| பாலபாடம் அரிவரி — ... | | 60 |
| பாலபாடம் முதலாம் புத்தகம் ... | | 50 |
| பாலபாடம் இரண்டாம் புத்தகம் ... | | 70 |
| பாலபாடம் நான்காம் புத்தகம் ... | 1 | 05 |
| பாலபாடம் ஆரும் புத்தகம் ... | 1 | 20 |
| பாலபாடம் எட்டாம் புத்தகம் ... | 1 | 25 |
| பாலகதாவாசகம் இரண்டாம் புத்தகம் ... | | 50 |
| பாலகதாவாசகம் மூன்ரும் புத்தகம் ... | | 65 |
| பாலகதாவாசகம் நான்காம் புத்தகம் ... | | 80 |

| | ரூ: | ச. |
|---|---|---|
| கந்தபுராணம் முதல் 100 பாடல்கள் வித்துவான் ந. சுப்பையபிள்ளை உரை ... | 1 | 50 |
| திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு 1 — 10 அதிகாரம் ... | | 75 |
| திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு 1 — 20 அதிகாரம் ... | 1 | 25 |
| சுப்பிரமணிய பாரதியார் பாடல் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை உரை .. | | 85 |
| The Glories of Saivaism S. Shivapathasundarampillai ... | 1 | 50 |
| An Outline of Sivagnana Bodham S. Shivapathasundarampillai ... | 1 | 25 |
| Dakshinamurthi His Life & Teachings | 1 | 50 |
| The Genesis of the Siva Gnana Bodham | | 50 |
| The Elements of Saiva Siddhantam | 1 | 50 |
| An Analysis of the Tirumantiram | 5 | 00 |
| Arumuga Navalar S. Sivapathasundarampillai ... | 1 | 00 |
| Tamil Sages and Seers of Ceylon ... | 1 | 00 |
| Sri La Sri Arumuga Navalar ... | 2 | 00 |
| A Study of the Svetasvatara Upanishad | 1 | 00 |
| An Education of the Tiruppasuram | 1 | 00 |
| The Founders of Modern Ceylon ... | 2 | 50 |
| C. W. Thamotharampillai ... ... | 1 | 50 |

பத்துப் பிரதிகளுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு இருபது வீத கழிவு உண்டு.

- தபாற் செலவு தனி
- வி. பி. பி. ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு :

அதிபர்
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
தொலை பேசி : 356

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஹூ மார்கழி மீ கக உ வெள்ளி

# எழுபத்தைந்தாம் ஆண்டு எழுச்சி தருமா ?

இருபதாம் நூற்ருண்டில் இவ்வுலகம் என்னபாடு பட்டிருக்கின்றதென்பதை வரலாற்று வல்லுநர்கள் தான் நன்கு கணிக்கமுடியும். உலகப்போர் இரண்டு நடந்ததும் அவற்ருல் அவனி முழுவதும் அமைதி குன்றிப் பின் அரசியல் அமைப்புக்கள் யாவும் மாற்றம் அடைந்ததும் ஒருபக்கம். முடியரசுகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துக் குடியரசுகள் குவலயத்தின் குறிக்கோளாகத் தோன்றியதும் இந்த நூற்ருண்டிலேயே. அரசியற் கொள்கைகள் பல வேருகி மத வேற்றுமைகளிலும்பார்க்க மிதமிஞ்சிய விதத்தில் விபரீதங்களைப் புகுத்தின. தத்தம் கொள்கையே தகுந்ததெனச் சாற்றி மலைகின்றனர் கட்சி வாதிகள்.

இவற்றுக்கெல்லாம் மேலாக மனித குடும்பமோ மட்டுக் கடங்காது பன்மடங்கு பெருகிவிட்டது. குடும்பக் கட்டுபாடு என்ற புதுக் கருத்தும் புகுந்துவிட்டது பூமாதேவியின் பொலிவு நிலப்பரப்பு இருந்தபடியேயாக, மக்கட் பொலிவு பெருகுவதால் உணவுக்கும் உடைக்கும் உறுபொருள் யாவற்றிற்கும் உலகில் அருமை தோன்றுவது இயல்பே. எனவே, பொருளாதாரம் ஒருவித ஆதாரமற்றதாய் வருவாய்க்கு மேலான விரயத்துக்கேதுவான நிலைமையை உண்டு பண்ணியிருக்கின்றது.

விஞ்ஞானம் மிக வேகமாக விரிந்த பரந்த விளைவுகளை காட்டிய வண்ணம் கவர்ச்சி தருகின்றது. அண்டங்கள், கோளங்கள் என்பவற்றுக்குப் புது வரைவு இலக்கணங்கள் எழுகின்றன. அணு பரமாணு என்ற சைவ சித்தாந்த அடிப்படைத் தத்துவ அறிவின் பொலிவை இப்பொழுதான் இக்கால விஞ்ஞானிகள் உணருகின்ருர்கள். ஆகவே மாற்றம் எங்கே உண்டானதென்று மக்கள் ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

கலியுகாதி ஐயாயிரத்தெழுபத்தாருண்டுகளிற் கிறித்துவ கணிதப்படி ஆயிரத்துத் தொளாயிரத்தெழுபத்து நான்கு வருடங்கள் கழிந்துவிட்டன. ஒவ்வொரு நூற்ருண்டுக்கும் வெவ்வேறு முக்கியத்துவம் வாய்ந்த வரலாறுண்டு. அவ்வாறே இருபத்தோராம் சகாப்தம் தொடங்கு முன் ஈற்றிருபத்தைந்தாண்டுகளின் போக்கு எவ்வாறுயிருக்கும் என்றே சரித்திர நூலாரும் பொது மக்களும எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றனர். சர்வசங்கார காலம்போன்ற பிரளய நிகழ்ச்சி என்று புராணங்களிற் படித்திருக்கிருேமல்லவா. அவ்வித பயங்கரச் சூழ்நிலை உண்டாகலாமென்றே சோதிட விற்பன்னர்கள துணிந்துரை செய்கின்றனர். எனினும் இறைநெறியாளருக்கு 'அல்லல் என் செயும் அருவினை யென் செயும்' என்ற ஆறுதல் மொழிகள் உண்டு. எல்லா நாட்களும் கோட்களும் பொல்லாங்கில்லாது நல்லாகவமையத் திருவருளே வேண்டித் திருத்தொண்டர்கள் திருமுறைகள் பாடினுர்கள், பாடிப் பலனும் அடைந்தார்கள் என்ற உண்மையை நாம் என்றும் மறவாது பரனடிக்கே மனத்தைப் பதியவைத்துப் பழியஞ்சிப் புண்ணிய வழியிற் போய்க் கொண்டிருந்தால் இவ்வாண்டு ஏன் எழுச்சி தரக்கூடாது என்று தைரியங் கூறுகின்ருேம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில், 3—1—1975 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெறறது.

பிரதம ஆசிரியர் : திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர் : திரு. மு. மயில்வாகனம்

## அங்கும் இங்கும்

வட பாகிஸ்தானில் நடைபெற்ற பூகம்பத்தில் சுமார் 4,700 பேர் இறந்திருக்கலாம் என்றும், எண்பது கிராமங்கள் தரை மட்டமாக்கப்பட்டனஎன்றும் தெரிகின்றது. கடந்த 40 வருட காலத்தில் ஆசிய உபகண்டத்தில் நடைபெற்ற மிகப் பெரிய பூகம்பம் இது என்று அவதானிகள்கருதுகிருர்கள்

பாலைவனம் ஒன்று கைத்தொழில் மயமான பிரதேசமாக மாறவிருக்கின்றது. சவூதி அரேபியாவை 198ப க்கு முன் கைத்தொழில் நாடாக மாற்றுவதற்கு ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு முன்வந்துள்ளது சவூதி அரேபியா நிலநெய் வளமுடைய நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையையொட்டி லண்டனில் இன்று ( 3-1-75 ) உண்ணவிரதம நடைபெறுகின்றது.

மன்னுர்ப் பகுதியில் தீடீர் சூருவளி வீசி உள்ளது. சுமார் ஏழுநிமிடங்கள்மட்டும் நீடித்த இச் சூறவளி பல வீடுகளுக்குச் சேதம் விளைவுத்துள்ளது, மன்னுரில் நிலவும் கால நிலை காரணமாக கரைத் தொழிலும மந்தமடைந்துள்ளது.

தெல்லிப்பளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்திற்குரிய ஒரு லட்ச ரூபா பணம் வங்கிக்கு எடுத்துச் செல்லப்படும் பொழுது கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. ஆனுல் அந்தக் கோள்

(வளர்ச்சி 5-ஆம் பக்கம்)

## உத்தரதேவி

முன் சேவையிலிருந்த "உத்தரதேவி" பலகாலமாக நிறுத்தப்பட்டிருந்தது. 6 — 1 — 75 தொடக்கம் மறுபடியும் கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இச்சேவை (புறப்படும் நேரம் பகல் 11-55) நடைபெறுமெனச் செய்தியொன்று கூறுகின்றது.

## தூரதிருஷ்டி, விண் ...

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

தூரம் என்பது எவ்வளவு என்று யாரும் சொல்லமுடியாத வகையில் அமைந்த விண்வெளிப் பெரும் பரப்பினுக்கப்பாலுள்ள கிரகங்களைக், கோள்களை, விண்மீன்களை அண்மையிலிருந்து அவதானிப்பது போன்று காணக்கூடிய வகையில் உள்ள இயந்திரங்களை இந்நூற்ருண்டு உலகிற்கு உதவியிருக்கிறது. என்னே விஞ்ஞானத்தின் எழில!

பெருவெளிக்கு ஒரு தூதாக இந்த இயந்திர அமைப்பு தொழிற்படவே கோள்களைப் பற்றிய புதிய விபரங்கள் பூவுலகுளோர்க்குப் புதினமாக வெளிவரும். சோதிடமும் வானசாத்திரமும் சாதாரண மக்களுக்கும் உரியதாய்ப் பல்வேறு புது விதிகளைப்போதிக்கும் காலமும் வந்து கொண்டிருக்கிறது.

நாளேன் செயும் கோளென் செயும் என்பாரும் விஞ்ஞான விநோதங்களைக் கண்டு வியப்படைந்தாலும் விஞ்ஞானததுக்கப்பாலான மெய்ஞ்ஞானத்தையே மேலும் விரும்புவாரல்லவா!

## எழுபத்தைந்தே! மும்மாரி வழங்கு.

— "இறை—ஒளி" —

ஆயிரத் துத்தொளாயி ரத்தெழுபத் தைந்தே, நீ
தாயிரக்கம் தந்து தனயரெமை — நோயின்றி
அன்னம் அரன்பூசை அல்லலற்று நாம்கொள
மன்னுமும் மாரி வழங்கு.

## நாவலர் பிள்ளைத்தமிழ்

[ எட்டாவது : சிற்றிற் பருவம். ]

ஆக்கம் : — "பழைய பாணி" —

( முன் வளர்ச்சி — 73 )

சைவத் திருவுந் தமிழ்த்திருவும்
தமிவே றென்பார் மனக்கோணத்
தட்டிச் சிதைத்தி தவநெறியாஞ்
சரியை கிரியை சாராமே
மெய்வைத் தமைந்த யோகநிலை
வேறு நெறியாற் பெறுதுமென்ருேர்
வித்தில் லாச்சம் பிரதாயம்
விளைப்போ ருக்கந் தனைச்சிதைத்தி
பொய்யைச் சிதைத்தி முழுப்பொய்யை
மெய்யாய்த் திரிக்கும் விபரீதப்
புன்மை சிதைத்தி பொழிற்றிகழும்
பூந்தே னருவி புறம்பணைசேர்
செய்யிற் றவழுந் திருநல்லைத்
தேவே சிற்றில் சிதையேலே
தெய்வத் திருவார் சிவகாமி
செல்வா சிற்றில் சிதையேலே. (5)

# பூண்டி மகானைப்பற்றி

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

[பண்டிதர் அவர்கள் இம்மகானைத் தரிசிப்பதற்கு முன் தென்னிந்தியத் தலங்கள் பலவற்றையும் வணங்கிதெய்வீக இன்பத்தை அனுபவித்ததன் பயனுக மகானை நேரிற் பார்க்கும் பாக்கியம் பெற்றதாகக் கூறி எழுதிய கட்டுரையில் அப் பெரியாரைப்பற்றி வரைந்ததை இங்கே தருகின்ருேம் ஆ—ர் ]

பூண்டிமகான் படுத்திருந்தாலும் சரி எழுந்திருந்தாலும் சரி அவரைத் தரிசிக்கச் செல்பவர் வணங்க வாய்ப்பு இருந்தது. படுத்திருக்கும் வேளையில் மகானின் திருவடிகளைத் திண்டிக் கண்களில் ஒற்றி வணங்குகின்றனர். அவரின் அருமைத் திருவடிகள் தாமரையின் அகவிதழ் போன்ற நிறமும் அதனிலும் மென்மையும் உடைத்தாயிருக்கின்றது. எழுந்திருக்கும் வேளையில் அவரது கரத்தால் திருநீறு பெறுகின்றனர். இரு பேறும் கிடைத்தது எனக்கு. நான் படித்து அறிந்தது போலவே எவரையும் வேற்றுமைப் படுத்தியுணராத, குறிக்கோளில்லாத, அகப்படுபவர்களின் உள்ளத்தைத் திருப்தியடையச் செய்கின்ற, சொல்ல முடியாத பல தன்மைகள் பொருந்திய மகானின் பார்வையைப் பார்த்து மகிழ்ந்தேன்.

இம்மகான் பல வருடங்களாக ஒரே இடத்தில் இருப்பதையும் இவரின்மகிமைகளை அறிந்து வரும் அன்பர்கள் தங்குவதற்கு ஒருமண்டபமும் கட்டியிருக்கிருர்கள். காணிக்கைப் பணத்தாலும் மகானின் அனுமதியைப் பெற்றும் அன்பர்கள் அம் மண்டபத்தைக் கட்டி முடித்திருக்கின்றனர். பூண்டி மகானுக்கு அணிவித்த மாலைகளும், சமர்ப்பித்த பழ வகைகள், பணியார வகைகள் போல்வனவும், அவர் தங்கியிருக்கும் திண்ணைக்கு அப்பால் குவிந்து காணப்படுகின்றன. வெயிலும் அதிக காற்ருேட்டமும் இல்லா அவ்விடத்தில் அவை அழுகிப் போகாமலும், துர்நாற்றம் வீசாமலும் இருப்பதைக் கண்ணுரக் கண்டேன்.

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

(2ஆம் பக்க வளர்ச்சி)

ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்

உரை: தோற்றமும் இத்துணைக்கால மென்னும் வாழ்நாளளவும் அவ்வளவு முடிவில் வருமொடுக்கமும் இல்லையாயிருந்தாய் அத்தகைமையான் எல்லாவுலகினையும் உண்டாக்குகின்ருய், உண்டாக்கியவற்றை நிலைபெறுத்துகின்ருய், நிலைபெறுத்தியவற்றை மீட்டொடுக்குகின்ருய்.

இம்முத்தொழிலுஞ் செய்புமுகத்தான உயிர்களின் அறிவை மறைக்கின்ற நீ அங்ஙன மறைக்குமுகத்தான் உயிர்கட்குச் செவ்வியை யுண்டாக்கி உண்டாய செவ்விக்குத்தக அருளுகின்ருய்; அருளுதற் ருெழிலாவது உயிர்களின் அறிவை மேன்மேல் விளக்கல்;

(வளரும்)